# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.37 (L.W.61)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr. ராஜ்குமார் | Caste | : |
| Father's Name | : ரத்தினசாமி | Calling | : |
| Village | : பெரும்பாக்கம் | Religion | : |
| Taluk | : | Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.02.2025.

(A6 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 03.02 P.M.**

நான் தற்போது சென்னை பெரும்பாக்கத்தில் தனியாக கிளினிக் வைத்து நடத்தி வருகிறேன். நான் கடந்த 25.06.2015 அன்று சென்னை இராஜிவ் காந்தி பொது மருத்தவமனையில் இருதய அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக அலுவல் பணியில் இருந்தபோது அன்று காலை 07.30 மணியிலிருந்து மறுநாள் காலை 07.30 மணிவரை பணியில் இருந்தபோது அவசர சிகிச்சை பிரிவு வார்டு 201–ல் இருந்து அழைத்ததின் பெயரில் ஷமீல் பாஷா என்ற நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதற்காக சென்றேன்.

அப்போது நோயாளியை பார்த்தபோது அவருக்கு மூச்சு விடுவதற்கு சிரமமாக இருந்ததால் அவருக்கு நுரையீரலில் காற்று மிகவும் குறைவாக சென்றதை பரிசோதனை மூலம தெரிந்துக்கொண்டேன்.

பிறகு அவருக்கு சிடி டெஸ்ட் எடுத்து பார்த்தில் அவருக்கு நுரையீரலை சுற்றி நீர் கோர்த்தள்ளதை அறிந்தேன். அதற்கு சிகிச்சையாக வலது பக்க நெஞ்சுப்பகுதியில் ஐசிடீ டியூப் பொறுத்த பரிந்துரைத்தேன். மேலும் தொடர் வலி நீக்க மருந்துகளும் அன்டிபயாடிக் மருந்துகளும் பரிந்துரை செய்தேன்.

நான் பார்க்கும்போது நோயாளி மூச்சு விடுவதற்கு சிரமப்பட்டார். பரிசோதனைகளின் விவரத்தை case sheet–ல் பதிவு செய்தேன். case sheet–ல் என்னுடைய முதுநிலை மருத்துவ மாணவர்கள் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். அதனை நான் சரிபார்த்து அதில் நான் சுருக்கொப்பமட்டேன். நான் நோயாளிக்கு case sheet ல் பதிவு செய்த ஆவணம் ஒரு தாளாகும் அந்த தாளின் பின்பக்கம் என்னுடைய மருத்துவ குறிப்பு உள்ளது. அது அ.த.சா.ஆ.56 ஆகும். சிபிசிஐடி டிஎஸ்பி என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நோயாளியை அதிகாலை 02.00 மணியளவில் பார்த்தேன். நான் நோயாளியை பார்ப்பதற்கு முன்பு நோயாளியை எத்தனை மருத்துவர்கள் பரிசோதித்தார்கள் என்று எனக்க தெரியாது. நான் அழைத்ததின் பெயரில் சென்றேன். case sheet ல் உள்ள விவரங்களை பார்த்துதான் மருத்துவம் பார்த்தேன்.

case sheet–ஐ பார்த்து எனக்கு முன்பு எத்தனை மருத்தவர்கள் பார்த்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. case sheet ல் எத்தனையாவது பக்கத்தில் நான் குறிப்பு எழுதினேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது.

case sheet–ல் நான் நோயாளியை பார்த்த தேதி எழுதியுள்ளேன். நேரத்தை குறிப்பிடவில்லை. case sheet ல் நோயாளியின் பெயர் Shameel Basha என்று எழுதப்பட்டிருந்தது. அ.த.சா.ஆ.56 ல் case sheet ல் நான் குறிப்பு எழுதிய பக்கத்தில் என்னுடைய பெயரை பெரிய எழுத்தில் எழுதி முழு கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

நான் நோயாளியை பார்த்த பரபரப்பான தருணத்தில் நோயாளிக்கு சிகிச்சை அளிக்க மட்டுமே நேரம் இருந்தது. அதனால் case sheet ல் எனது சுருக்கொப்பத்தை மட்டுமே போட்டேன். Medico Legal வழக்கில் நோயாளியை சிகிச்சை அளிப்பது தெரியும் என்றம் அவ்வாறு இந்த வழக்கில் போலீசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அ.த.சா.ஆ.56–ஐ நான் எழுதினேனா என்றால் என்னுடைய முதுநிலை மருத்துவ மாணவர்கள் எழுதினார்கள். அவ்வாறு என்னுடைய முதுநிலை மருத்துவ மாணவர்கள் எழுதினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. அ.த.சா.ஆ.56 ல் நான் குறிப்பு எழுதியதாக சொல்லிய பக்கத்தில் என்ன தேதி உள்ளது என்றால் என்றால் சரிதான்.

அதில் 06.06.2015 என்று உள்ளது. கீழே 26.06.2015 என்று உள்ளது. அ.த.சா.ஆ.56 ல் உள்ள சங்கதிகள் சிலது கட் ஆகியுள்ளது என்றால் சரிதான். தேதி ஓரத்தில் உள்ளதால் அது துண்டாகியிருக்க வாய்ப்புள்ளது. அதில் உள்ள வாசகம் நான் எழுதியதுதான். அது வெவ்வொறான கையெழுத்தால் உள்ளது என்றால் சரியல்ல. மூன்றும் ஒரே கையெழுத்துதான்.

வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக சிடி ஸ்கேன் எடுக்க ஒரு மணி நேரம் ஆகும் என்றால் அவ்வாறு இல்லை 10 நிமிடத்தில் கூட எடுக்கலாம். இரவு நேரத்தில் சிடி ஸ்கேன் எடுக்கமாட்டார்கள் என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.த.சா.ஆ.56 ல் என்னுடைய பெயர் எழுதவில்லை. என்னுடைய அலுவல் பெயரான Duty assistant cardiac thoracic surgeon என்று எழுதியுள்ளேன். அதில் என்னுடைய சுருக்கொப்பம் போட்டுள்ளேன்.

போலீசார் விசாரிக்கும்போது சிடி ஸ்கேனின் அசலை பார்த்துதான் நான் வாக்குமூலம் கொடுத்தேன். போலீசார் அதனை மடிகணினியில் பதிந்துக்கொண்டார்கள். சிடி ஸ்கேனில் சாதாரண நிலையில் உள்ள தசைக்கும் அடிப்பட்ட தசைக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் ஓரளவுக்கு வித்தியாசம் தெரியும்.

நுரையீரலில் முற்றிலும் நீர் கோர்த்துள்ளதாக நான் கூறியதில் நுரையீரலில் முற்றிலும் நீர் கோர்த்துள்ள தோராயமாக எவ்வளவு நேரம் எடுக்கும் என்றால் அது நோயை பொறுத்து. 100 மி.லி இருந்து சுமார் 1 லி வரை நீர் கோர்த்த பின்னர்தான் நுரையீரலில் முச்சு திணறல் ஏற்படும். அவ்வாறு 1 லி முதல் 1.5 லி வரை நீர் கோர்க்க சுமார் 5 முதல் 10 நாட்கள் ஆகும். நுரையீரலில் தோராயமாக எவ்வளவு நீர் இருந்தது என்று என்னுடைய மருத்துவ குறிப்பில் குறிப்பிடவில்லை.

நுரையீரலில் எவ்வளவு நீர் உள்ளது என்று சிடி ஸ்கேனில் தெரியுமா என்றால் தெரியும். சிடி ஸ்கேன் மூலம் நுரையீரல் எவ்வளவு தண்ணீர் உள்ளது என்று கணிக்க இயலம்.

நோயாளியை நான் பரிசோதித்தபோது அவருக்கு இதய துடிப்பு சாதாரணமாக இருந்தது. அ.த.சா.ஆ.56 ல் நான் இரண்டு நுரையீரலும் நீர் கோர்த்துள்ளதாக எழுதியுள்ளேன். நுரையீரலும் நீர் கோர்த்துள்ளதால் மட்டும் இறப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்றால் குறுப்பிட்டு சொல்ல இயலாது.

நோயாளியை நான் பாரக்கவில்லை என்றாலும் போலுசிர் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்து நீதிமன்றத்தில் போலீசாரிடம் சொல்லாத விஷயங்களை பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

நான் இதய நோய் சம்பந்தப்பட்ட உதவி பேராசிரியராக அப்போது பணியாற்றினேன். நோயாளிக்கு என்னை அழைத்ததின் பெயரில் சென்று சிகிச்சை அளித்தேன். Thanks for reference என்று Case sheet ல் எழுதியுள்ளேன். என்னுடைய முதுநிலை மருத்துவ மாணவர்கள் Thanks for reference என்று எழுதியுள்ளார்கள்.

நோயாளி இருந்த வார்டின் பணி மருத்துவர் யார் என்றால் எனக்கு தெரியாது. பணி மருத்துவரின் பெயர் தெரியாது என்று நான் சொல்லும் வகையில் யார் என்னை அழைத்து நான் சிகிச்சைக்கு சென்றேன் என்றாலும் சட்டம் சார்ந்த வழக்கில் அவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நோயாளியின் மருத்துவ வரலாற்றில் நான் குறித்துள்ளேன். நோயாளிக்கு என்னென்ன மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது என்று நான் விவரமாக குறிக்கவில்லை. காரணம் history noted என்பது நோயாளியின் முந்தைய மருத்துவ குறிப்புகளை பார்த்துவிட்டுதான் அவ்வாறு எழுதுவது வழக்கம்.

அ.த.சா.ஆ.56–ல் என்னுடைய எழுத்து இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய அறிவுறுத்தின்படி என்னுடைய முதுநிலை மருத்துவ மாணவர்கள் எழுதினார்கள். ஒரு முறை ஐசிடி எடுத்த பிறகு மீண்டும் அதை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. ஐசிடி டியூப் வேலை செய்யும் வரையில் அதை மாற்ற வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு வேலை செய்யாமல் போனால் அந்த அடைப்பை எடுக்க வேண்டும்.

நான் அதிகாலை 02.00 மணிக்கு ஐசிடீ எடுக்குமாறு வலியுருத்தினேன். அதன்பிறகு எத்தனை மணிக்கு ஐசிடி எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஏற்கனவே நோயாளிக்கு ஐசிடி எடுக்கப்பட்டது என்றம் அது தெரியாமல் நோயாளிக்கு நான் ஐசிடி எடுக்க வேண்டும் என்று சொல்லியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல.

அ.த.சா.ஆ.56–ல் case sheet–ல் நோயாளியின் பெயர் குறிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் கூறிய அனைத்தும் பொய்யானது என்றாலும் நான் நோயாளிக்கு சிகிச்சை அளித்ததாக போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.50 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.13 18:34:02 +0530